பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 06 | சனிக்கிழமை | 23.09.2023 | அதிர்வு 53

## சர்வதேச விசாரணை தேவையில்லையாம்

### மைத்திரி ‘பல்டி’

- சுடர் திலீபன் -

”உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், அதனை அடிப்படை யாகக்கொண்டு யுத்தம்

04

## திருமலையில் இன மோதலை ஏற்படுத்த திட்டமிட்டுச் செயற்படுகின்றது இந்த அரசு

### நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு



- ஏ.ஜே.சார்ள்ஸ் -

“திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள–தமிழ்இனமோதலைஉருவாக்க அரசு திட்டமிட்டுச் செயற்படுகின்றது எனச் சந்தேகம் எழுந்துள்ளது.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக் குதல் சம்பவம்,

09



# இனவாதம் இனிமேல் எடுபடாது!

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

- சீ.ஏ.தமிழ்மாறன் -

“இலங்கையில் இனிமேல் எவரும் இன வாதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஆட்சியைத் தக்கவைக்கவோ அல்லது ஆட்சியைப் பிடிக்கவோ முடியாது. ஏனெனில் மக்கள் அனைவரும் விழிப்படைந்து விட்டார்கள். மக்களை எவரும் இனி ஏமாற்ற முடியாது.”

09

## பிள்ளையான் குழுவினருக்கு மாதாந்தம் 35 இலட்சம் ரூபா

### இப்போதும் வழங்குகின்றதா அரச புலனாய்வுப் பிரிவு? சபையில் ஜேவி.பி. தலைவர் அநுர பகிரங்கக் கேள்வி



- சுடர் திலீபன் -

“அரச புலனாய்வுப் பிரிவின் கணக்கில் இருந்து இப்போதும் பிள்ளையான் குழுவினருக்கு மாதாந்தம் 35 இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றதா?”

02


## வவுனியா விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

– கே.வசந்தரூபன் –

வவுனியா, ஏ – 9 வீதி, பறண்நட்டகல் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத் தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

02










பேரினவாதத்தின் கொள்கைப் போக்கும் கூட அதன் தேவைக் கும் நோக்குக்கும் ஏற்ப காலத்திற்குக் காலம் மாறும் என்பது கண்கூடு.

அது ஒரு தென்னி லங்கை அச்சு ஊடகம். இனவாதத்தின் உச்சத்தில் நிற்பது. சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரண வக்க போன்றவர்களே பெரும்பாலும்

03

# குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தூக்கு மேடைக்குச் செல்லவும் தயார்

## சபையில் பிள்ளையான் அறிவிப்பு



- சுடர் திலீபன் -

**"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளுக்குத் தயார் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். என் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால் தூக்கு மேடைக்கும் செல்ல நான் தயார்." - இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம், தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி நளின் பண்டார என்னைக் கடுமையாக நாகரிகமற்ற வகையில் விமர்சித்துள்ளார். என்னைக் "கொலையாளி" என்று விமர்சித்துள்ளார். ஆகவே, அந்த வார்த்தையை நாடாளுமன்ற ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு வேண்டுகின்றேன்.

எனது ஊடக செயலாளராக இருந்த அன்ஷிப் ஆஸாத் மௌலான புகலிடக் கோரிக்கைக்காக என் மீது பாரிய பழியைச் சுமத்தியுள்ளார். ஒருவகையில் இந்த மௌலானா வெற்றி பெற்றுள்ளார். ஏனெனில் அவர் பிரபல்யமடைந்துள்ளார். அவரது புகலிடக் கோரிக்கையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நான் விலகியதன் பின்னர் புலிகள் அமைப்பு பலவீனமடைந்து தோல்வியடைந்தது என்று என் மீது வெறுப்புக் கொண்டுள்ள நாடு கடந்த தமிழர் அமைப்புக்கள் ஆஸாத் மௌலானாவின் பின்னணியில் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களால் மறுக்கப்பட்ட தமிழர்களுக்கான உரிமைகளை நான் தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளதால் அடிப்படைவாத கொள்கையுடைய முஸ்லிம் அமைப்புக்கள் என் மீது வெறுப்புக்கொண்டுள்ளன. மறுபுறம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழ் தலைமைகளும் என்னை வீழ்த்த இந்த விடயத்தை ஒரு ஆயுதமாக எடுத்துள்ளன.

குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு 2020.10.08 ஆம் திகதி முன்னிலையானபோது சிறைச்சாலையில் இருந்தபோது சந்தித்தவர்களையும், பேசப்பட்ட விடயங்களையும் குறிப்பிட்டுள்ளேன். நான் சாட்சியமளிக்கச் செல்லும்போது ஆஸாத் மௌலானாவும் என்னுடன் வருகை தந்திருந்தார்.

கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு சஹ்ரான் உட்பட அவரது தரப்பினர் செயற்பட்டுள்ளார்கள். பயங்கரவாதி சஹ்ரான் பல பகுதிகளில் பயிற்சிக் கூடங்களை நடத்தியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா ஒன்றும் அறியாதவர் போல் தற்போது கருத்துத் தெரிவிகின்றார்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் கலீமா என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பேசுகின்றார்கள். எதிர்காலத்திலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாமல் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு மக்கள் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும்.

அடிப்படைவாத கொள்கையைக் கொண்டவர்கள் நாட்டில் உள்ளார்கள். தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். பிரதேச பொலிஸ் சேவைகள் பலப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளுக்குத் தயார் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். என் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால் தூக்கு மேடைக்கும் செல்ல நான் தயார். முஸ்லிம்களின் வாக்குகளை பெறுவதற்காக எதிர்க் கட்சித் தலைவரும், ஜே.வி.பி.யினரும் என்னை விமர்சிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நான் தவறு செய்யவில்லை. எனது கையில் இரத்தக்கறையில்லை. எனவே, எனது அரசியல் பயணம் தொடரும். அதனை யாரும் தடுக்க முடியாது." - என்றார்.

### பிள்ளையான் குழுவின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தின்போது, ஜே.வி.பியினரால் தங்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

பிள்ளையான் கூறுகையில், "அநுரகுமார திஸாநாயக்க எனது பெயரைக் குறிப்பிட்டு கருத்துத் தெரிவித்தார். அரசியலுக்காக நீங்கள் எதனையும் பேசலாம். ஆனால், நீங்கள் ஒரு விடயத்தை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகின்றேன். நீங்களும் அரசியல் செய்யும் காலத்தில் நாங்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நாங்கள் பிரிந்து வந்த போது, உங்களுடைய அமைப்பால் (ஜே.வி.பி) துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. அப்படியென்றால் நீங்கள் உங்கள் அமைப்பில் இருந்த பிணையில் விடுவிக்கப்பட்ட மகன்மார்களுக்கு உங்களின் பழைய துப்பாக்கிகள், வெடிகுண்டுகளைக் கொடுத்திருக்க முடியாதா?" - என்றார்.

இதன்போது பதிலளித்த அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவிக்கையில்,

"நாங்கள் ஆயுதங்கள் வழங்கியதாகக் கூறுவதை முற்றாக நிராகரிக்கின்றோம். அத தவறான கருத்து. எமது அமைப்பு ஆயுத அரசியலில் ஈடுபட்டது. அது முழுமையாக நிறைவடைந்தது. இது தொடர்பில் விசாரணை நடத்த முடியும். அரச புலனாய்வுப் பிரிவின் கணக்கில் மாதாந்தம் 35 இலட்சம் கணக்கில் வழங்கப்பட்டு பிள்ளையானின் குழு பராமரிக்கப்பட்டது. அவ்வாறு இப்போதும் 35 இலட்சம் வழங்கப்படுகின்றதா என்று கேட்க விரும்புகின்றேன்." - என்றார்.

### வவுனியா விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஓமந்தையில் வெதுப்பம் நடத்தி வரும் சிவசேகரம் தினேஷன் என்பவர் வவுனியாவில் இருந்து ஓமந்தைக்குத் தனது மோட்டார் சைக்கிளில் செல்லும் போது, பறண்நட்டகல் சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தியிருந்த பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்த்திசையில் இருந்து வந்த பட்டா ரக வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற சிவசேகரம் தினேஷன் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார். அவரது சடலம் வவுனியா பொது வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை நீதிமன்றத்தை அச்சுறுத்தி தாக்குதலாளிகளைப் பிணை எடுத்த பிக்குகள்

## பொலிஸாரும் உடந்தை எனக் கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



– சுடர் திலீபன் –

“என் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களையும் விடுவிக்காது விட்டால் இனக்கலவரம் வெடிக்குமென திருகோணமலை நீதிமன்றத்தை அச்சுறுத்திப் பிக்குகளும், பொலிஸாரும் அவர்களைப் பிணையில் எடுத்துள்ளனர்.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம், தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டிய கஜேந்திரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

“தியாகி தீலீபனின் நினைவு ஊர்தி மீது அக்கரைப்பற்றில் வைத்து சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அதனை ஒரு வன்முறையாகவும் மாற்றும் முயற்சி இடம்பெற்றது. அதில் ஒரு சிலர் முஸ்லிம்களாக இருந்தனர். ஆனால், இந்த ஆர்ப்பாட்டத்துக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாட்டை அக்கரைப்பற்று இராணுவ முகாமில் உள்ள உளவுத்துறையினர்தான் செய்திருந்தனர். முஸ்லிம் மக்கள் எமக்கு எதிராக எங்குமே செயற்படவில்லை.

தொடர்ந்தும் எமது தியாகி திலீபனின் நினைவு ஊர்தி பயணிக்கும்போது முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் இராணுவ முகாமுக்கு முன்பாக ஒரு கூட்டம் எமக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. அந்த இராணுவ முகாமையைச் சேர்ந்த பண்டார மற்றும் தினேஷ் போன்ற இராணுவ உளவாளிகள்தான் அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். அதே கும்பல் எங்களை முந்திச் சென்று வாழைச்சேனையில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டது.

தொடர்ந்து திருகோணமலையை நோக்கி நாம் பயணிக்கும்போது சேருவிலவில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஏற்பாட்டில் பௌத்த பிக்கு ஒருவர் தலைமையில் எங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், நாம் இரவாகிவிட்டதால் அந்த இடத்–துக்குச் செல்லாமல் வேறு வழியூடாகச் சென்று ஆபத்திலிருந்து தப்பிக்கொண்டோம்.

17ஆம் திகதி நாம் தம்பலகாமத்திலிருந்து திருகோணமலையை நோக்கிப் பயணித்தபோது சர்தாபுர பகுதியில் வைத்து எங்கள் மீது காடைத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நாம் ஊர்திப் பவனியை ஆரம்பித்த இடத்திலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடம் வரை எமக்கு முன்னும் பின்னும் புலனாய்வுத் துறையினர் மோட்டார் சைக்கிள்களில் வந்து கொண்டிருந்தனர். அவர்களின் விபரங்கள் தம்பலகாமம் பொலிஸில் எம்மால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் எங்கள் மீது சர்தாபுரத்தில் வைத்து மிருகத்தனமான கொலைவெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

என்னை ஒரு எம்.பி. என்று தெரிந்து கொண்ட பின்னர் அங்கிருந்தவர்கள் சிங்கக்கொடிகளைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு அந்தக் கொடிகளின் கட்டைகளினாலும் தலைக்கவசத்தாலும் என்னைக் கடுமையாக தாக்கினர். அத்துடன் எமது கட்சியின் அமைப்பாளர்கள் மீதும் கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற மறுநாள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். அதற்குப் பின்னர் வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தைப் பொலிஸாரும், 9 பிக்களும் அச்சுறுத்தி சந்தேகநபர்களைப் பிணையில் எடுத்துள்ளனர். அவர்களுக்குப் பிணை கொடுக்காது விட்டால் இனக் கலவரம் வெடிக்குமென அச்சுறுத்தியே அவர்களைப் பிணையில் எடுத்துள்ளனர். இந்த நிலை தொடருமா இருந்தால் நாட்டிலே மிகப்பெரிய மோசமான நிலைமைகள் உருவாகும்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன் கதாநாயகர்கள்.

பேரினவாதப் பரவனி பண்பியல் பின்படி சீனாவை போற்றும் அது எப்போதும் இந்தியாவைத் தூற்றும். அல்லது கரித்துக் கொட்டும். இந்திய மேலாதிக்கம் இலங்கை மீது செலுத்தப்படுவதாகக் கோடி காட்டி அதற்கு எதிராக விஷம் கக்குவதே அதன் ஊடகக் கொள்கை போலும் என்று நான் எண்ணிக் கொள்வதுண்டு.

இந்திய மேலாதிக்கத்துக்கு எதிராக என்ற பெயரில் தென்னிலங்கைச் சிங்களவர்களைத் தூண்டி, ஏத்தி விட்டுக் கொண்டிருப்பது அந்த ஊடகத்தின் தளராத பணி.

தனது ஆசிரியர் தலையங்கங்களிலும் பிற பத்திகளிலும் ‘மயிலிறகால் மருந்து தடவுவது போல’ அது இந்தியாவுக்காகக் கவலைப்படும் திடீர் மாற்றத்தை கடந்த ஓரிரு தினங்களாக அவதானித்து அதிர்ந்து போனேன். என்ன, ஏது என்று தேடினேன்.

விவகாரம் இதுதான். காலிஸ்தான் தீவிரப் போக்குடைய இருவர் கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்டமையை அடுத்து கனடா – இந்தியா இடையே ராஜதந்திர விரிசல் – முரண்பாடு – ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

அந்த விடயத்தில்தான் இந்தியா பக்கம் சாய்ந்து அந்த ஊடகம் கதை பேசத் தொடங்கியிருக்கின்றது. அப்படி இந்தியா பக்கம் நியாயம் இருக்கலாம். அதை அந்த அச்சு ஊடகம் ஆதரிப்பதும் சரியாக இருக்கலாம்.

ஆனால் இலங்கையில் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து, கொழும்புக்கு எதிராக உசுப்பேத்தித் தூண்டி விட்டதில் புதுடில்லியின் பங்கு மறுப்பதற்கு இல்லை. இந்தியாவை – தமிழகத்தை – தளமாகப் பாவித்துத் தான் தமிழ்ப் போராளிகள் மேலெழுந்தார்கள். இந்தக் காரணங்களின் அடிப்படையில் இப்போது இந்தச் சிக்கலில் இந்தியாவைச் சாட வேண்டிய அந்தப் பேரினவாத ஊடகம் அதற்கு மாறாக இப்போது இந்தியா பக்கம் அணிவகுத்து, கனடாவைச் சாடும் நிலைப்பாட்டில் நிற்கின்றது.

சற்று ஆழமாக இறங்கிப் பார்த்த போதுதான் உண்மை புரிந்தது.

இப்போது இந்தியாவில் தமிழ்ப் போராளிகள் இல்லை. அவர்களின் களங்களோ தளங்களோ அங்கு கிடையாது. போதாக் குறைக்கு புலிகளை அழிப்பதற்கு இந்தியாவும் சேர்ந்து கொழும்புக்கு உதவியது.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யுங்கள் என்று அவ்வப்போது புதுடில்லி பேச்சளவில் வலியுறுத்துவதை தவிர தமிழர் ஆதரவு போக்கு இந்திய பக்கத்தில் இருந்து இப்போது பெரிதாக இல்லை.

ஆனால் மேற்குலகம் – கனடா போன்றவை – ஈழத் தமிழர்களுடன்தான் பெயரளவிலேனும் அணி வகுத்து நிற்கின்றன. ஈழத் தமிழர் ஒருவருக்கு கனடா அமைச்சர் பதவியும் கொடுத்து அழகு பார்க்கின்றது. ஈழத் தமிழர் ஆதரவுச் செயற்பாடு கனடாவில் தீவிரம். அப்படி எல்லாம் இந்தியாவில் இல்லை.

ஜெனிவா விவகாரத்தில் கூட இந்தியா சற்று அமுக்கி வாசிக்க, கனடா உட்பட்ட மேற்குலகம் தமிழருக்கு ஆதரவாகக் கொழும்பை ஒரு பிடி பிடிக்கின்றன.

அதனால் கனடாவை எதிரியாக்கி, இந்தியாவைத் தன் பக்கம் நிறுத்தி ஊடகப் பணியைத் தொடர்கின்றது அது.

அதனை ஒரு பேரினப் போக்கு ஊடகமாக நான் அடையாளப்படுத்தியமை சரிதானே வாசகர்களே...?

# மூழ்கிய இலங்கை மீன்பிடி படகை மீட்ட இந்திய கடலோர குழுவினர்

நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை கடற்கரையில் இருந்து சில கடல் மைல்கள் தொலைவில் கவிழ்ந்த இலங்கை மீன்பிடி படகை இந்திய கடலோர பாதுகாப்பு குழுவின் வேதாரண்யம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தருணத்திலேயே இந்தப் படகு நீருக்குள் மூழ்க ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் அளித்த தகவலின் பிரகாரம் வேதாரண்யம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜோதி முத்துராமலிங்கம் தலைமையிலான குழுவினர் படகை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

படகு கடலில் நான்கில் மூன்று பங்கு மூழ்கிய நிலையிலேயே மீட்கப்பட்டது. படகில் இருந்த மீனவர்களை படகுடன் பாதுகாப்பாக மீண்டும் இலங்கைக்கு அனுப்ப உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் வேதாரண்யம் கடலோர பாதுகாப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## சர்வதேச விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பிலும் தமிழ் டயஸ்போராக்கள் சர்தேச விசாரணை கோரலாம். எனவே, சர்வதேச விசாரணை அவசியமில்லை என ஐ.நா. பிரதிநிதியிடம் கூறிவிட்டேன். உள்ளக விசாரணைக்கு சர்வதேச தொழில்நுட்ப உதவி இருந்தால் போதும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத்தில் இந்தளவுக்கு விவாதம் நடத்தப்பட்ட விடயம் வேறு எதுவும் இருக்காது. இதில் நானே இலக்காக இருக்கின்றேன். தாக்குதல் நடந்த நாள் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் கருத்துத் தெரிவித்துள்ளேன். அதன்போது எனக்குப் புலனாய்வுப் பிரிவோ, பாதுகாப்புத் தரப்பினரோ எனக்கு அறிவிக்கவில்லை. இதனை மக்கள் நம்புகின்றார்கள் இல்லை. நான் தெரிந்து கொண்டே வெளிநாட்டுக்குச் சென்றிருந்ததாகத் தெரிவிக்கின்றனர். இதன்படி நானே பொறுப்புக் கூற வேண்டியவர் என்றும் கூறுகின்றனர்.

7 நீதியரசர்களைக் கொண்ட வழக்கு விசாரணையில் எனக்குத் தகவல்கள் அறிவிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை நான் சபையில் சமர்ப்பிக்கின்றேன். நான் 2016 ஆம் ஆண்டு முதல் எனக்குக் கிடைத்த தகவல்கள் தொடர்பில் பாதுகாப்புச் சபையில் கூறியுள்ளேன்.



சர்வதேச நாடுகளில் ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல்களை நடத்தும்போது இங்கு இவ்வாறு நடக்க இடமளிக்கக்கூடாது என்று நான் அடிக்கடி பாதுகாப்பு சபையில் கூறியுள்ளேன்.

சஹ்ரானைக் கைது செய்யாமை தொடர்பில் கூறுகின்றனர். அவரைக் கைது செய்யவென அதிகாரிகள் இருக்கின்றனர். அதற்கு ஜனாதிபதி போகப் போவதில்லையே. நான் 2019 ஜனவரியில் நடந்த பாதுகாப்புச் சபையில் சஹ்ரானைக் கைது செய்யாது இருக்கின்றமை தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளேன். அத்துடன் ஒரு வருடமே பொலிஸ் அமைச்சு இருந்தது. கிடைத்து 6 மாதத்திலேயே குண்டு வெடித்தது. இவ்வாறு குண்டு வெடிக்க முன்னர் நான்கு வருடங்கள் என்னிடம் பொலிஸ் அமைச்சு இருக்கவில்லை. சம்பவம் நடந்த பின்னர் சஹ்ரானுடன் தொடர்புடைய முழு அமைப்புகளையும் இல்லாமல் செய்துவிட்டேன்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், அதனை அடிப்படையாகக்கொண்டு யுத்தம் தொடர்பிலும் தமிழ் டயஸ்போராக்கள் சர்தேச விசாரணை கோரலாம். எனவே, சர்வதேச விசாரணை அவசியமில்லை என ஐ.நா. பிரதிநிதியிடம் கூறிவிட்டேன்.

உள்ளக விசாரணைக்குச் சர்வதேச ரீதியில் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் ஐ.நாவிடமும் நாங்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு கேட்கின்றேன்.

அத்துடன் சிலர் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இங்கு விவாதங்களை நடத்தி இன்னும் பணத்தைச் செலவழிக்கத் தேவையில்லை. என் மீது குற்றச்சாட்டை முன்வைத்தவர்களுக்குப் பதிலளிக்கின்றேன்.

சரத் பொன்சேகாவுக்குப் பீல்ட் மார்ஷல் பதவியை நானே வழங்கினேன். நான் வழங்கியது வேண்டாம் என்றால் அந்தப் பதவியை இல்லாமல் செய்து கொள்ள வேண்டும். அவர் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை விடுவித்து அவருக்குப் பீல்ட் மார்ஷல் பதவியை வழங்கினேன். இந்நிலையில், சில இராணுவ அதிகாரிகள் என்னிடம் அவர் பற்றி கூறுவர். யுத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு கிளிநொச்சி வரும் அவர் கொங்கிறீட் பங்கருக்குள் இருப்பார் எனவும், அவர் யுத்தக் களத்துக்குச் செல்லவில்லை எனவும் இராணுவ அதிகாரிகள் சிலர் என்னிடம் கூறியுள்ளனர். நாய் மனித கால்களைக் கடிக்கும் ஆனால் மனிதன் நாயின் காலைக் கடிப்பதில்லை." – என்றார்.

# பால்மா மீதான இறக்குமதி வரி பத்து வீதத்தினால் அதிகரிப்பு

பால்மா மீதான இறக்குமதி வரி ஒரு கிலோகிராமிற்கு 10 வீதத்தால் அதிகரித்துள்ளது.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் பால்மா ஒரு கிலோவிற்கு 10 வீதம் வரி அதிகரிக்கப்படும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த வரி அதிகரிப்பினால் உள்ளூர் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இந்த வரி அதிகரிப்பினால் எதிர்காலத்தில் பால்மாவின் விலை அதிகரிக்கப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# நாடாளுமன்ற குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த அலி சப்ரி ரஹீம் எம்.பிக்குத் தற்காலிகமாகத் தடை

நாடாளுமன்ற குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிற்கு தற்காலிகத் தடை விதிக்கும் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் தங்கம் மற்றும் பொருள்களை நாட்டிற்குக் கொண்டு வந்த சம்பவம் தொடர்பில் அவருக்கு எதிராக நாடாளுமன்ற ஒழுக்கக்குழு மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்தமையுடன், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல அதனை வழிமொழிந்தார்.

சட்டவிரோதமான முறையில் 74 மில்லியன் ரூபா பெறுமதியான 3.3 கிலோகிராம் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குக் கொண்டு வந்த போது, சுங்கப் பிரிவினரால் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கைது செய்யப்பட்டார்.

பின்னர் 75 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிற்கு விதிக்கப்பட்ட அபராதம் மிகக்குறைவானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

# காணி விவகாரம் குறித்து அனைவரும் கட்சி நிலை கடந்து பேச வேண்டும்!

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

தனியார் பெருந்தோட்ட நிறுவனங்களினால் பயன்படுத்தப்படாதிருக்கும் காணிகளை பொதுச் செற்பாடுகளுக்குப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவை விரைவுபடுத்த கட்சி பேதமின்றி ஜனாதிபதியுடன் கலந்துரையாட வேண்டும் எனப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் தலைமையில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



பெருந்தோட்டங்கள் தனியார் மயப் படுத்தப்பட்டமையால் அவற்றின் கீழ் பயன்படுத்தப்படாதுள்ள பல ஏக்கர் காணிகளைப் பொதுச் செற்பாடுகளுக்குக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இதனைப் பெற்றுக் கொள்வது குறித்து கடந்த அரசாங்கத்தின் காலத்தில்சட்டவரைவொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு சட்டவரைஞர் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





# பிள்ளையான் கூறும் ஐ.எஸ். அமைப்பினர்கள் இங்கிருந்தால் அவர் இனம் காட்ட வேண்டும்!

## சும்மா கதை விடக் கூடாது என்கிறார் அதாவுல்லா



ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் இன்றும் நாட்டில் இருக்கின்றனர் என இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவிக்கும் விடயம் உண்மையாக இருந்தால் அவர் அவ்வாறானவர்களை இனம்காட்ட வேண்டும். அவ்வாறு இல்லாமல், இல்லாத விடயங்களை தெரிவித்து குழப்பங்களை ஏற்படுத்த இடமளிக்க முடியாது என ஏல்.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்டர் குண்டு தாக்குதலின் சூத்திரதாரி யாராக இருந்தாலும் அவர் கண்டறியப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். எங்களால் நீதியை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டாலும் இறைவனின் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் ஐ.எஸ். பயிற்சி பெற்றவர்கள் நாட்டில் இருக்கின்றனர் என அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அன்று தெரிவித்தபோது அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் பாரிய தொரு அழிவு ஏற்பட்டுள்ளது. அதேநேரம் தற்போதும் நாட்டில் ஐ.எஸ் அமைப்பைச்சேர்ந்தவர்கள் இருக்கின்றனர் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித்திருக்கிறார்.

சந்திரகாந்தன் இந்த அரசாங்கத்தில் இருப்பவர். அப்படியானால் இது தொடர்பில் அவர் வெளிப்படுத்தி, அப்படியானவர்களை இனம்காட்ட வேண்டும். அவ்வாறு இல்லாமல் இல்லாத விடயங்களை தெரிவித்து குழப்பங்களை ஏற்படுத்த இடமளிக்க முடியாது. – என்றார்.

# அ’புரம் – வவுனியா வரை ரயிலே சமிக்ஞை கட்டமைப்பு வடிவமைப்பு இந்தியாவிடம்!

இலங்கை ரயில்வே சேவையின் மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான (66 கி.மீ.) ரயில் பாதையின் சமிக்ஞைத் தொகுதியினை வடிவமைத்தல், பொருத்துதல், பரிசோதித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தம் ஒன்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைசர் பந்துல குணவர்த்தன மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் முன்னிலையில் இலங்கை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் ஐசுஊமுடே நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத், இலங்கைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலங்கை ரயில்வே சேவைகள் திணைக்களம், ஐசுஊமுடே நிறுவனம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

318 மில்லியன் அமெரிக்க டொலர் இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 14.90 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அங்கு உரை நிகழ்த்திய இந்திய உயர் ஸ்தானிகர் – இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பிசி வலுவாக்குதல், நாட்டின் பொருளாதர மீட்சியைத் துரிதப்படுத்துதல், இலங்கை மக்களின் போக்குவரத்தை இலகுவாக்குதல் ஆகியவற்றில் இந்த சமிக்ஞைத் தொகுதியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.



மேலும், தற்போதைய சூழலில் இந்த திட்டத்திற்கான கடனுதவியானது, இலங்கை மக்களுடன் இந்திய அரசாங்கமும் மக்களும் துணை நிற்பதற்கான தொடர்ச்சியான விருப்பத்தை அடையாளப்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் டாக்டர் பந்துல குணவர்த்தன உரை நிகழ்த்தும் போது, கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்குப் பல வழிகளில் ஆதரவளித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் ரயில்வே சேவை மேம்பாட்டு திட்டங்களுக்கு அண்மைக்காலமாக இந்தியாவில் இருந்து மட்டுமே கடனுதவி அடிப்படையில் ஆதரவு கிடைத்துள்ளது என்றும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதுவரை வழங்கப்பட்ட 5 கடனுதவி திட்டங்களில்1பில்லியன்அமெரிக்கடொலர் பெறுமதியான திட்டங்கள் ரயில்வேத் துறையில் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அத்துடன், 2009 மார்ச்சில் தனது செயற்பாடுகளை இலங்கையில் ஆரம்பித்திருந்த ஐசுஊமுடே நிறுவனம் இந்திய உதவியின் கீழ் இலங்கையில் பல்வேறு வகையான திட்டங்களை நிறைவேற்றியுள்ளதுடன், இலங்கையின் ரயில்வே சேவைகள் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல், திறன்விருத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது, ஐசுஊமுடே நிறுவனம், மாஹோவிலிருந்து ஓமந்தை வரையிலான (128 கிமீ) ரயில்பாதையின் புனரமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தி பணிகள் உட்பட ரயில் பாதையை மேம்படுத்துவதற்கான திட்டத்தை 91.27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்கின்றது.

இத்திட்டத்தின் கீழ், அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான ரயில் பாதைப் புனரமைப்பு பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், அநுராதபுரத்திலிருந்து மாஹோ வரையிலான புனரமைப்பு பணிகள் 2024 ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான அபூஹிந் யார் என்பதுகண்டறியப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் வெளிப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் உண்மை என்ற தீர்மானத்துக்கு நாங்கள் வரவில்லை.

ஆனால் இந்த விடயங்களின் உண்மை தன்மை தொடர்பாக பூரண விசாரணை மேற்கொள்ள வேண்டும். விசாரணையை தாமதப்படுத்தும் அனைவரது கரங்களிலும் இதன் இரத்தம் படிந்திருக்கிறது. தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அபூஹிந். ஆனால் அவர் யார் என கண்டறியப்பட வேண்டும்.

அத்துடன் இந்த தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்க எமது அரசாங்கத்தில் நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதிமொழியை தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்குகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையை முழுமையாக எங்கள் யாருக்கும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. ஆனால் செப்டெம்பர் 11 அமெரிக்க பெண்டகன் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையை பூரணமாக எங்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். அரசாங்கம் ஏன் மக்களுக்கு இதனை மறைக்க வேண்டும்?

இந்தத் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து விசாரணை நடத்துவதற்கு நாம் இணங்க முடியாது. அவ்வாறு தெரிவுக்குழு அமைப்பதாக இருந்தால் அதன் எண்ணிக்கை ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் சமமாக இருக்க வேண்டும். பெண்டகன் விசாரணை குழுவில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சமமாக நியமிக்கப்பட்டதனாலேயே அவர்களுக்கு உண்மையைத் தெரிந்துகொள்ள முடியுமாகியது.

அத்துடன் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் சஹ்ரானை புலனாய்வு அதிகாரிகள் நாடு பூராகவும் தேடிக் கொண்டிருந்தனர். ஆனால் ஐ.பி. முகவரியில் சஹ்ரானுடன் அதிகமாக தொலைபேசியில் உரையாடி இருப்பது புலனாய்வு அதிகாரி ஒருவர் என அமெரிக்காவின் எவ்.பி.ஐ. தெரிவித்துள்ளது. இந்த விடயத்தின் உண்மை என்ன என்பதை அரசாங்கம் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று மாத்தளை பொடி, சஹ்ரான் சொனிக் சொனிக்குடன் தொலைபேசியில் உரையாடி இருப்பது வெளிப்பட்ட போது அந்த சிம்காட் புலனாய்வு ஒருவரிடம் இருப்பது தெரியவந்துள்ளது.அந்தப் புலனாய்வு அதிகாரி, இந்தத் தாக்குதலை ஐ.எஸ். ஏன் இன்னும் பொறுப்பேற்காமல் இருக்கிறது? விரைவாக பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன்போது, பொடி சஹ்ரான் இந்தோனேசியாவுடன் தொடர்புகொண்டு கேட்ட போது அவர் இன்னும் பைஅத் (உறுதி மொழி) செய்யவில்லை என தெரிவிக்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 23 ஆம் திகதி இந்தியாவில் இருந்து உறுதி மொழி காணொலி இணையத்தளத்துக்கு பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இந்த சொனிக் சொனிக் விடயத்தை விசாரணை நடத்தவேண்டும்.

அதேபோன்று குண்டுதாரி ஜெமீல் குண்டை வெடிக்கவைக்க முன்னர் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் 2 பேர் ஜெமீலின் வீட்டுக்கு சென்றுள்ளனர். இது எவ்வாறு முடியும்? அதேபோன்று குற்றப்புலனாய்வு அதிகாரிகள் உரையாடிய தொலைபேசி இலக்கத்தை தேடிப்பார்க்கும்போது அது பிழையான முகவரியில் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதுடன் அந்த சிம்காட்டை பயன் படுத்தியே லசந்த விக்கிரமதுங்கவை கொலைசெய்ய நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதும் தெரியவந்திருக்கிறது.

கீத் நொயர், பிரகீத் எக்னெலிகொட, உபாலி தென்னகோன் ஆகியோரைக் கடத்துவதற்குப் பயன்படுத்தி இருப்பதும் இந்த சிம்காட்டைப் உபயோகித்துத் தானாகும் என்பதும் விசாரணைகளில் வெளிவந்திருக்கிறது.

அதனால் குண்டுதாரி ஜெமீலை புலனாய்வு அதிகாரிகள் எவ்வாறு தெரிந்து கொண்டிருந்தார்கள் என்பதை விசாரிக்க வேண்டும்.

மேலும், சஹ்ரானுக்கு மேலாக ஒருவர் இருந்தார். அவரின் கட்டளைக்கமையவே அனைத்தும் இடம்பெற்றிருக்கின்றன. அவர்தான் அபூஹிந். அபூஹிந்த என்பது அவரின் புனைப்பெயர். அதனால் இந்த



தாக்குதலின் சூத்திரதாரி அபூஹிந். அவர் யார் என்பதை விசாரணை நடத்த வேண்டும். அதேபோன்று சாரா ஜெஸ்மின் தொடர்பாக டீ.என்.ஏ. பரிசோதனை 3 நடத்தப்பட்டுள்ளது. முதலாவது இரண்டிலும் சாரா உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. 3ஆவதில் அவர் மரணித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சாய்ந்தமருதில் குண்டு வெடித்த வீட்டில் குண்டு வெடித்த பின்னர் சாராவின் குரல் ஓசை கேட்டதாக சஹ்ரானின் மனைவி தெரிவித்திருக்கிறார். அதனால் இது தொடர்பாகவும் விசாரணை மேற் கொள்ளவேண்டும்.

மேலும், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு, அமைச்சரவை மற்றும் பிரதமரை நியமிக்க முன்னர் ஈஸ்டர் தாக்குதல் விசாரணை மேற்கொண்டு வந்த புலனாய்வு அதிகாரிகள் சானி அபேசேகர உட்பட 31பேரை மாற்றினார். ஏன் அவர் அவ்வாறு செய்தார்? இதன் உண்மையை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன், பேராயர் கர்த்தினால் இந்தத் தாக்குதலை அறிந்திருந்தார் எனவும், அவருக்கு இது தொடர்பாக புலனாய்வுப் பிரிவு அறிவித்திருந்ததாகவும் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் இந்தச் சபையில் தெரிவித்திருந்தார். ஆனால் தாக்குதலுக்கு பின்னரே பேராயர் கர்த்தினாலுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. பேராயர் கர்த்தினாலுக்கு புலனாய்வுப் பிரிவு வழங்கிய – தாக்குதல் தொடர்பில் எச்சரிக்கை விடுத்த – கடிதத்தை சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, ஈஸ்டர் தாக்குதலுக்கு நான் உட்பட அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும். அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக்கூறவேண்டும். அதனால் எமது அரசாங்கத்தில் தாக்குதலின் உண்மை சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுப்போம். இந்த உறுதிமொழியை தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறேன். – என்றார்.

# திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகம் திறந்துவைப்பு










(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றை எடுத்தியம்பும் 'பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!'எனும் தொனிப் பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றிலில் நேற்று மாலை மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இது திறந்து வைக்கப்பட்டது.

6.30 மணியளவில் தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றிலில் மலரஞ்சலி செலுத்தி நிகழ்வு ஆரம்பமாகியது பின் வரலாற்று ஆவணக் காட்சியகத்தை மூன்று மாவீரர்களின் தாய் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தியாக தீபம் திலீபனின் வரலாற்றுப் புகைப்படங்கள் தொகுக்கப்பட்டுக் காட்சிப் படுத்தப்பட்டன.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கறுப்புக் 'கோர்ட' கிரிமினல்கள்!

இலங்கை நீதித்துறையின் முகத்திரை கிழிய ஆரம்பித்திருக்கின்றது. கறுப்புக் 'கோர்ட்' சீருடைக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் ஒரு சில கறுப்பு ஆடுகளின் சதி நடவடிக்கைகள் மெல்ல வெளிப்படத் தொடங்கியுள்ளன.

தமிழரின் உரிமைப் போராட்டத்தைக் காட்டி கொடுத்த ஒருவரைக் கொடூரக் கொலைக் குற்றத்திலிருந்து சட்டத்துக்கு முரணான வகையில் மீட்கவே இத்துணை தூரம் நீதித்துறை தலை சாய்த்து, மோசமாகக் கீழிறங்கி, மண்டியிடும் என்றால், அந்தப் போராட்டத்தையே அழிப்பதற்குப் பேரினவாதம் புரிந்த கொடூரங்களை மறைக்க, அந்தப் பேரினவாத நீதித்துறை எந்த எல்லை வரைப் போகும் என்பதை நடுநிலையாளர்கள் யாவரும் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை என்று கூறப்படும் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து விசாரிப்பதற்கு இலங்கை நீதித்துறையை நம்ப முடியாது, சர்வதேச நியமப்படியான நீதிப் பொறிமுறையே அவசியமானது என்று தமிழர் தரப்பு வலியுறுத்துவதில் புதைந்துள்ள நியாயம் இப்போது எல்லோருக்கும் இலகுவாகப் புரியத்தக்கதாக இருக்கும்.

ஆயுதம் தாங்கிய போராட்டங்களை எதிர்கொள்ள அல்லது அடக்க ஆயுதம் தாங்கிய படைகள் களம் இறக்கப் படுகின்றன. அத்தகைய ஆயுதப் போராட்டங்கள் வன்முறை வழியானவை என்பதால் அங்கு மனித உரிமை மீறல்கள், சட்ட மீறல்கள், குற்றங்கள் போன்றவை தாராளமாக இடம் பெறுவது புரிந்து கொள்ள தக்கதே.

அத்தகைய மனித உரிமை மீறல்கள், சட்ட மீறல்கள், யுத்த குற்றங்களையே சர்வதேச சமூகம் பொறுப்பதில்லை. சகிப்பதில்லை. கடுமையான தண்டனைப் பார்வையுடன்தான் அவற்றை நோக்குகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் தொடர்பில் 14 ஆண்டுகள் கடந்தும் முழுமையான விசாரணை நடக்கவில்லை. ஆனால் அதற்காக அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் வாளாவிருக்கவில்லை. தமது சொந்த விசாரணைகளின் அடிப்படையில் இலங்கைப் படைகளின் மூத்த அதிகாரிகளுக்கு எதிராக பயணத் தடை உட்பட பல நடவடிக்கைகளை எடுத்து அவை அறிவித்து வருகின்றன.

ஆயுதம் தாங்கிப் போரிடும் தரப்புக்களின் தளபதிகளின் மனித உரிமை மீறல்கள் விடயங்களிலேயே இவ்வளவு கடும்போக்குக் காட்டும் மேற்குலகம், சட்டத்தின் பெயரால், நீதி தேவதையின் பெயரால், சத்தியபிரமாணம் செய்து, உயரிய நீதிபதிகள் ஸ்தானத்திலிருந்து கொண்டு, மனித உரிமை மீறல்கள் புரிந்த கொடூர வாதிகளையும், யுத்தக் குற்றவாளிகளையும் விடுவிப்பதற்கு சதி மறைவில் துணை போன கறுப்பு ஆடுகளை - கறுப்பு கவுண் அதிகாரிகளை - எப்படி நோக்கப் போகின்றது?

மனித உரிமைகளைப் பேணி நிலை நாட்ட வேண்டிய உயரிய நீதிமன்றங்களில், நீதியை நிலை நிறுத்தும் கடவுள் ஸ்தானத்தில் இருந்து கொண்டு, மறைவில் பாதகர்களுடன் கூட்டுச் சேர்ந்து அவர்களைக் காப்பாற்றும் - சட்டத்தைப் போட்டு மிதிக்கும் - இத்தகைய கறுப்புச் சட்டைக் கிரிமினல்கள் தொடர்பில் மேற்குலகம் எப்படி நடக்கப் போகின்றது?

மேற்குலகம் அறிவிக்கும் பயண தடை என்பது தனி நபர்களுக்கு மட்டும் உரியதன்று. அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் அது பொருந்தும். கறுப்புக் கோர்ட் அணிந்தவர்கள் எதிர்காலத்தில் இத்தகைய திரை மறைவு சதிகளுக்குத் துணை போய். சட்டத்தை நிர்வாணமாக்கும் கெடுதலை அவர்கள் தொடர்ந்து புரியாமல் இருக்க வேண்டுமானால், இப்போது அக்கொடூரத்தை புரிந்தவர்களுக்கு எதிராக - முன்னுதாரமாக - மேற்குலகின் தண்டனை நடவடிக்கை பாய வேண்டும் மேற்குலக என்ன செய்யப் போகின்றது?

# தாளையடி விபத்தில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம் – தாளையடிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தாளையடியைச் சேர்ந்த சின்னையா தனபாலசிங்கம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தாழையடிப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தன

## திருமலையில் இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இந்நிலையில் அண்மைக்காலமாக திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள – தமிழ் இனவாத முரண்பாடுகள் அதிகம் இடம்பெறுகின்றன. இதன் ஒரு கட்டமாகவே கஜேந்திரன் எம்.பியும் திருகோணமலையில் வைத்து சிங்களவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

எனவே, இனவாத மோதல்களுக்கு மூவின மக்களும் வாழும் திருகோணமலை மாவட்டம் பொருத்தமானதாக இருப்பதால் திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது." – என்றார்.

## இனவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்ற நியூயோர்க் சென்ற ஜனாதிபதி, அங்கு சர்வதேச ஊடகம் ஒன்றிடம் இலங்கையின் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் செவ்வி வழங்கினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கை மக்கள், ஜனநாயக அரசியலில் மாற்றத்தை விரும்பினார்கள். அந்த மாற்றம் இறுதியில் ஏற்பட்டது. ஜனாதிபதிப் பதவியையும் நான் ஏற்க வேண்டி வந்தது. நாட்டின் பெரும் அரசியல், பொருளாதார சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றேன். சவால்களை முறியடித்து – தடைகளைத் தாண்டி நாட்டை முன்னோக்கி நகர்த்துகின்றேன். இதற்கு நாட்டு மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புக்களும், ஆதரவுகளும் கிடைக்கின்றன. பல வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புக்களும், சர்வதேச நிறுவனங்களும் இலங்கை மீண்டெழ உதவிகளை வழங்கின. இப்போதும் வழங்கிக்கொண்டிருக்கின்றன.

எனது பதவிக் காலத்தில் தேசிய பிரச்சினைகளுக்கு இயன்றளவு படிப்படியாகத் தீர்வுகளைக் கண்டு வருகின்றேன்.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் இன ரீதியிலான பிரச்சினைகளைத் தூண்டிவிட சிலர் முனைகின்றனர். மீண்டுமொரு இன வன்முறை ஏற்பட ஒருபோதும் இடமளியேன்." – என்றார்.

# ஒன்பது வயது மகள் மீது துஷ்பிரயோகம்; தந்தையைத் தேடுகின்றனர் பொலிஸார்!



கண்டி மாவத்தேகம பகுதியில் மகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய தந்தை ஒருவரை கைது செய்வதற்கு பொலிஸார் பொது மக்களின் உதவியை கோரியுள்ளனர்.


இந்த சந்தேகநபர் கண்டி மாவத்தேகம பகுதியில் 09 வயதுடைய தனது மகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தாய் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், சந்தேகநபர் அந்த பகுதியிலிருந்து தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

942913940எ என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்குரிய 29 வயதுடைய கிஹான் தனுஷ்க்க என்பவரே சந்தேக நபராவார்.

இவர் தொடர்பில் தகவல் அறிந்தால் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# சுகாதார அமைச்சில் பிரச்சினைகள்; ஆராய இரு உப குழுக்கள் நியமனம்

சுகாதார அமைச்சில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராய கோபா எனப்படும் அரச கணக்குகள் தொடர்பிலான தெரிவுக்குழுவினால் இரண்டு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அரச கணக்குகள் தொடர்பிலான தெரிவுக்குழு, அதன் தலைவர் லசந்த அழகியவண்ண தலைமையில் கூடியது.

இதன்போது, மருந்துதட்டுப்பாடுமற்றும் மருந்து கொள்முதல் குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை முன்வைக்க நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையில் உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக டயானா கமகே, அசோக்க அபேசிங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் அருணி அமரசூரிய ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட தலைமையில் மற்றுமொரு உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த உப குழுவில் இசுரு தொடங்கொட, விமலவீர திசாநாயக்க, மஞ்சுலா திசாநாயக்க, வீரசுமன வீரசிங்க மற்றும் முதிதா பிரஷாந்தி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தஇரண்டுஉபகுழுக்களிலும்கோபா குழுவின் எந்தவொரு உறுப்பினரும் பங்குபற்ற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார அமைச்சின் அனுமதியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அதிகாரிகளால் வழங்கப்பட்ட பதில்கள் திருப்தி அளிக்கவில்லை என அரச கணக்குகள் தொடர்பிலான தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான தரவுக்கட்டமைப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.






# ஆழ்கடலையும் ஆய்வு செய்யும் இந்தியா: களமிறங்கும் 'மத்ஸ்யா 6000' நீர்மூழ்கி!

விண்வெளியில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் இந்தியா ஆழ்கடலையும் ஆய்வு செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அதற்கு உதவியாக, இந்தியாவின் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள சென்னை தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் 'மத்ஸ்யா 6000' என்ற நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்கியுள்ளது

இந்த நீர்மூழ்கிக் கப்பல், கடல் மட்டத்தின் கீழ் 6000 மீட்டர் ஆழத்திற்கு 3 ஆய்வாளர்களை ஏற்றி செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் 2.1 மீட்டர் விட்டமும் 600 பார் அழுத்தத்தை தாங்கக்கூடிய 22 மில்லிமீட்டர் தடிமன் கொண்டதாக மூலம் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் முதல் மனித கடல் ஆய்வுப் பணியாக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் மூலமான ஆய்வுகள் கடல் வாழ்விடத்தையும், கடல்வாழ் உயிரினங்களையும் பாதிக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவை எதிர்கொள்ள போர்க்கப்பல்களில் எண்ணிக்கையை அதிகரிக்கிறது இந்தியா!




இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவை எதிர்கொள்ள 2035 ஆம் ஆண்டுக்குள் இந்திய போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை 175 ஆக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என தி இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீன போர்க்கப்பல்களின் போக்குவரத்து அதிகரித்து வருகின்ற நிலையில், கம்போடியாவின் ரேம் என்ற இடத்திலும் கடற்படைத் தளத்தை அமைக்கும் முயற்சியில் சீனா இறங்கியுள்ளது என தி இந்து செய்தி வெளியிடுள்ளது.

ஆபிரிக்காவின் டிஜிபோட்டி, பாகிஸ்தானில் கராச்சி, குவாடர் ஆகிய பகுதிகளில் சீன கடற்படைத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனா 355 போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்களுடன் உலகின் மிகப்பெரிய கடற்படையாக உருவாகி வருகிறது என தி இந்து செய்தி வெளியிடுள்ளது.

அடுத்த 5 முதல் 6 ஆண்டுகளில் சீனாவின் போர்க்கப்பல்களின் எண்ணிக்கை 555 ஆக அதிகரிக்கும் எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, 2 லட்சம் கோடி செலவில் 68 போர்க்கப்பல்களை தயாரிப்பதற்கு இந்திய கடற்படை முன்பதிவு செய்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2035 ஆம் ஆண்டளவில் இந்திய கடற்படையில் ஆகக்குறைந்தது 175 போர்க்கப்பல்கள் காணப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# காலிஸ்தான் பிரிவினைவாதியின் கொலையில் இந்தியாவுக்கு சிறப்பு விதிவிலக்கு கிடையாது!

## - அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கருத்து




காலிஸ்தான் பிரிவினைவாதி கொலையில் இந்தியாவுக்கு சிறப்பு விதிவிலக்கு ஏதும் கிடையாது என்று அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.

கனடாவுடனான உறவில் பிளவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்தை அமெரிக்கா ஏற்கவில்லை என்றும் காலிஸ்தான் பிரிவினைவாதி கொலை தொடர்பான விசாரணை விரைவில் அடுத்தக்கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்லப்படுவதை காண விரும்புகிறது எனவும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜர், கனடாவில் கடந்த ஜுன் மாதம் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதில் இந்தியாவுக்கு தொடர்பு இருக்கிறது என கனடா பிரதமர் கூறியதால் இந்தியா-கனடா உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதனையடுத்து பாது காப்புக்கு காரணங்களால் கனடாவில் இருந்து இந்தியா வருவதற்கு விசா வழங்கும் சேவைகள் மறு அறிவிப்பு வரும்வரை நிறுத்தி வைக்கப்படுகிறது என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் பேசுகையில், காலிஸ்தான் பிரிவினைவாதி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இந்தியா, கனடா ஆகிய இரு நாடுகளுடனும் அமெரிக்கா தொடர்பில் இருக்கிறது. இதுபோன்ற செயல்பாடுகளில் சிறப்பு விலக்கு ஏதும் அளிக்கப்பட இயலாது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

கனடாவின் குற்றச்சாட்டுகளை உற்று கவனிக்கிறோம். காலிஸ்தான் பிரிவினைவாதி கொலையில் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையில் நேரடியாக பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி ஜோ பைடன் பேசுவாரா என்பது தெரியாது. ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க உயர்மட்ட அளவில் ஆலோசனைகள் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

---

# இந்திய பிரதமர் மோடியுடன் வெளிப்படையாக பேசினேன்!

## - கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு



பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் நேரடியாகவும், வெளிப்படையாகவும் பேசினேன் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜர், கனடாவில் கடந்த ஜுன் மாதம் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து இந்தியா-கனடா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த விவகாரத்தில் நீதியை நிலைநாட்ட இந்திய அரசாங்கம் தங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கோரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் ஜஸ்டின் ட்ரூடோ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், கனடா மண்ணில் கனட குடிமகன் ஒருவர் கொல்லப்பட்டதில் இந்திய அரசாங்கத்தின் முகவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று நம்புவதற்கான நியாயமான காரணங்கள் உள்ளன. இந்திய அரசு இந்த விடயத்தை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், இந்த விடயத்தில் முழு வெளிப்படைத் தன்மையுடன் நடந்து, நீதியை நிலைநாட்ட எங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் சட்டத்தின் ஆட்சி நடக்கும் ஒரு நாடு. கனடா மக்களை பாதுகாக்கவும், சர்வதேச அடிப்படையிலான சட்ட ஒழுங்கை நிலைநாட்டவும் நாங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டியுள்ளது. அதில்தான் இப்போதைக்கு எங்களின் கவனம் உள்ளது.

நாங்கள் சட்டத்தின் ஆட்சிப்படி நின்று, எந்தவொரு நாட்டிலும் அதன் சொந்த மண்ணில் ஒரு குடிமகன் கொலை செய்யப்படுவது எந்த அளவு ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை சுட்டிக் காட்டுகிறோம். நான் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் நேரடியாகவும், வெளிப்படையாகவும் பேசினேன். என்னுடைய கவலைகளை அவரிடம் பகிர்ந்து கொண்டேன் என்று தெரிவித்துள்ளார்.

---

# உக்ரைன் நகரங்களில் ட்ரோன் தாக்குதல்!



உக்ரைன் நகரங்கள் மீது ரஷ்யா சரமாரியாக ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.


இந்த நிலையில், நேற்று அதிகாலை உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் கார்கிவ் பகுதிகளில் ரஷ்யா சரமாரியாக ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். 18 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த ட்ரோன் தாக்குதலில் பல குடியிருப்பு கட்டடங்கள், வணிக வளாகங்கள் ஆகியவை பலத்த சேதமடைந்துள்ளன.

தெற்கு உக்ரைன் பகுதியில் உள்ள கெர்சன் நகரில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளில் சிக்கி 2 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 18 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மருதமுனை அரபுக் கல்லூரியின் 5 ஆவது பட்டமளிப்பு விழா நாளை




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அந்-நஹ்ழா அரபுக் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா கல்லூரியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ. எம்.பதுறுத்தீன் தலைமையில் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி அஷ்ரப் அரங்கத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு பட்டம் பெறவுள்ள ஹாபிழ்கள் மற்றும் மௌலவிகளுக்கான அறிமுக ஊர் வலம் கல்லூரி அமைந்திருக்கும் மஸ்ஜிதுல் நூராணியா ஜும்ஆ பள்ளி வாசல் மூன்றுலில் ஆரம்பமாகி நிகழ்வு நடைபெறும் அல்-மனார் மத்திய கல்லூரி வரை நடைபெறும்.

வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாஜ் அல்ஹாபிழ் என். எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் பணிப்பாளர் இசட்.ஏ.எம்.பைசால், நஹ்ழா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.அபூஉபைதா (மதனி), தென்கிழக்கு பல்கலைக்கழகத் தின் அரபு மொழித் துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் அஷ்-ஷெய்க் எம்.எஸ். எம்.ஜலாலுத்தீன், அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலை வர் அஷ்-ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஷிம் சூரி (மதனி),பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, இறக்காமம் பிரதேச செயலாளரும் அரபுக் கல்லூரியின் பழைய மாணவருமான அல்ஹாபிழ் எம்.எஸ்.எம்.றஸ்ஸான், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, மருதமுனை வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர். ஏ.எல்.எம்.மிஹ்ழார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ள னர்.

விசேட அதிதிகளாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி ரீ.எல்.ஏ.மனாப், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி, முன்னாள் மேல் நீதிமன்ற ஆணையா ளர் சட்டத்தரணி எம்.எஸ்.எம், ஜெமீல், கல்முனை குவாஸி நீதிமன்ற நீதிபதி எவ். எம்.ஏ. அமீருல் அன்சார் மௌலானா, அல்-மனார் மத்திய கல்லூரி அதிபர் ஐ.எல். உபைதுல்லாஹ், ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் எம்.எம்.ஹிர்பகான், பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ்.கே.வீரசிங்க, மஸ்ஜிதுல் கபீர் ஜு/ம்ஆ பள்ளிவாசல் தலைவர் பேராசிரியர் ஐ.எல்.எம். மாஹிர், மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம். முஹர்ரப், தப்லீக் ஜமாத் பொறுப்பாளர் பொறியாளர்,இசட். உபைதுல்லாஹ், ஓய்வு நிலை அதிபர் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா உட்பட பொது மக்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை வானொலி பிரதிப்பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம் தொகுத்து வழங்கவுள்ளார்.

# ஹட்டன் - குயில்வத்தைப் பகுதியில் மதுச்சாலைக்கு எதிராக போராட்டம்





ஹட்டன்- குயில்வத்தை பகுதியில் மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களால் போராட்டமொன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் மதுபானசாலை அமைக்க மது வரி திணைக்களத்தில் அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில் இதற்கு எதிராக குயில்வத்தை - ரொசல்ல பகுதி மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் நடந்த போராட் டத்தில் 200 இற்கும் மேற்பட்ட தொழி லாளர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். சுமார் ஒரு மணித்தியாலம் போராட்டம் இடம்பெற்றது.

“தனிமனித வாழ்க்கைக்காக சமூகத்தை அழிக்காதே!, “ரோட்டில் பாரை திறந்து வீட்டில் போர் மூட்டாதே”, “குடியை ஊக்குவித்து உன் ஊதியத்தை பெருக்காதே“ போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளைத் தாங்கிய வண்ணம் போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர் பில் போராட்டக்காரர்கள் கருத்து தெரி விக்கையில் –

“மலையகம் 200 என பல விழாக் களை ஒழுங்கு செய்து நடத்தப்படு கின்றன. இந்த 200 வருட பூர்த்தியை முன்னிட்டு மலையக பகுதிகளில் 200 பாடசாலைகளையோ அல்லது வைத் தியாசாலைகளையோ அபிவிருத்தி செய்திருக்கலாம். அல்லது மலையக பெருந்தோட்ட பகுதியில் எத்தனையோ மக்கள் நிரந்தர குடியிருப்பின்றி தற்கா லிக கூடாரங்களில் வாழ்கின்றனர். அம்மக்களுக்கு வீடுகளை அமைத் துக்கொடுத்திருக்கலாம். இவ்வாறு மலை யக பகுதிகளில் பூர்த்தி செய்யப்படாத எத்தனையோ தேவைகள் காணப்படு கின்றன.

இந்நிலையில் மீண்டும் மீண்டும் இப்பகுதியில் மதுபானசாலைகள் அமைக்கப்பட வேண்டுமா? வட்டவளை யிலிருந்து ஹட்டன் வரையுமான குறுகிய தூரத்தில் சுமார் ஏழு மதுபானசாலைகள் இயங்குகின்றன. இதற்கு மேலதிகமாக மேலும் ஒரு மதுபானசாலைக்கு அவசி யம் இங்கு இல்லை” எனக் கூறினர்.

# மதுபோதையில் பொலிஸ் நிலையத்தில் கலவரம் ஏற்படுத்திய அரச ஊழியர் கைது

## மட்டக்களப்பில் வியாழனன்று சம்பவம்

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு நகரில் மதுபோதையில் வந்து தாக்கிய கணவருக்கு எதிராக முறைப்பாடு செய்ய மனைவியும் மகனும் பொலிஸ் நிலையம் சென்ற சமயம், அங்கு சென்று கலவரம் ஏற்படுத்திய - பிரதேச செயலகம் ஒன்றில் கடமையாற்றிவரும் - அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை மதுபோதையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாம் கைது செய்தனர் எனத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டு. தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தைச் சேர்ந் பிரதேச செயலகம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தாரக் கடமையாற்றிவரும் ஒருவர் வியாழக்கிழமை மதுபோதையில் மனைவி, மகன் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இதனையடுத்து அவர்கள் அங்கிருந்து தப்பி, பொலிஸ் நிலையம் போகின்றனர் எனத் தெரிவித்து அங்கு சென்றனர்.

இதனையடுத்து "பொலிஸ் நிலையத்துக்கா செல்லுகின்றீர்கள்? நானும் வாரேன். அங்கு இரண்டில் ஒன்று பார்க்கலாம்" - என்றி கூறி கணவர் அவர்களைப் பின் தொடர்ந்து பொலிஸ் நிலையத்துக்குள் சென்றார். அங்கு அவர் பெரும் கலவரம் ஏற்படுத்திய மையையடுத்து அவரை பொலிஸார் கைது செய்தனர்.

அவரை, வைத்தியசாலையில் அனுமதித்து, மது பாவித்தாரா என்பதை உறுதிபடுத்திய பின்னர் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து, மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

அவரை 2 ஆயிரத்து 500 ரூபா அபதாரம் செலுத்துமாறும், 25 ஆயிரம் ரூபா கொண்ட ஒருவருட நன்னடத்தை ப் பிணையில் செல்லுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# 25,000 குடும்பங்களுக்கு வடக்கில் நிரந்தர வீடுகள்

## நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆளுநரால் முன்னெடுப்பு

-எஸ்.நிதர்ஷன்-

வடமாகாணத்தில் நிரந்தர வீடுகள் இல்லாத - குறைந்த வருமானம் பெறும் - குடும்பங்களுக்கு 25,000 நிரந்தர வீடுகளை கட்டிக்கொடுத்து வட மாகாணத்தில் உள்ள வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வீட்டுத்திட்டம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

குறிப்பாக நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும், மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களை உடனடியாகக் கண்டறிந்து அதற்கான திட்டங்களைத் தயாரித்து தம்மிடம் ஒப்படைக்குமாறும் ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டது.

நிரந்தர வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் ஐம்பது லட்சம் ரூபாவை செலவிடவுள்ளது. வீடொன்றுக்கு தேவையான வசதிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் எனக் கூறப்படுகின்றது.



இவ்வீடுகளின் கூரைகளைப் பயன்படுத்தி சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் வடமாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இறுதிக் கட்டம் வரை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்படி கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களில் சுமார் 6,000 நிரந்தர வீடுகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இவ்வாறான தோல்வியடைந்த வீட்டுத்திட்டங்களைப் போலல்லாது இந்த 25,000 வீடமைப்புத் திட்டத்தை தயாரிப்பதில் பணிகள் முடியும் வரை அதிகாரிகள் மிகவும் திட்டமிட்டு சரியான முறையில் செயற்பட வேண்டுமென ஆளுநர் அறிவுறுத்தினார்.

மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் இத்திட்டத்திற்காக செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில வீட்டுத்திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

அவற்றைக் கேட்டறிந்த ஆளுநர் இவ்வீடமைப்புத்திட்டம், ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்படும் என்று கூறினார்.

# ஊடகவியலாளருக்கு எதிரான வழக்கில் கடற்படை அதிகாரிக்குப் பிடிவிறாந்து!

## முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் விடுத்தது



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற தமிழ் ஊடகவியலாளர் ஒருவருடன் ஏற்பட்ட பிணக்குத் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறிய கடற்படையின் புலனாய்வு அதிகாரி ஒருவரை நீதிமன்றத்திற்கு அழைக்கும் வகையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் டி. பிரதீபன், நான்கு வருடங்களுக்கு முந்திய சம்பவம் தொடர்பான வழக்கை ஒட்டி, கடற்படைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்தார் எனப் பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 2019 ஏப்ரல் 07ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்து, வட்டுவாகல் பாலம் வரை கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்திய சமயம் ஊடகவியலாளர்கள் மற்றும் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் அவர்களைப் படம் பிடித்த ஒருவரை மக்களும் ஊடகவியலாளர்களும் பிடித்து விசாரித்தனர். அவர் பின்னர் தான் கடற்படை அதிகாரி என்பதை ஒப்புக்கொண்டார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் அவரை கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றமையையடுத்து, அவர் கடற்படை அதிகாரி என்பதை அதிகாரிகள் உறுதி செய்தனர்.

முகாமிற்கு வந்த பொலிஸாரிடம் இவரை ஒப்படைத்த போராட்டக்காரர்கள் பின்னர் திரும்பிச் சென்றனர்.

அதன் பின்னர் கடற்படை அதிகாரியும் அவரது சாட்சியாக வந்த மற்றுமொரு கடற்படை அதிகாரியும் அந்த விடயத்தை ஒட்டி ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனுக்கு எதிராகப்பொய்யான தகவல்களை முன்வைத்து முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்தனர் என்று கூறப்படுகின்றது.

முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட பொலிஸார் ஊடகவியலாளர் தவசீலனை வரவழைத்து, அவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, பிணையில் விடுவித்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மனுதாரரான கடற்படை புலனாய்வு அதிகாரி விசாரணைக்கு முன்னிலையாக வில்லை.

இதற்கமைய, கடற்படை புலனாய்வு அதிகாரியையும் மற்றும் அவரது சாட்சியாக பொலிஸில் முறைப்பாடு செய்த மற்றைய அதிகாரியையும் கைது செயது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு முல்லைத்தீவு நீதிவான் டி.பிரதீபன் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கு 2023ஆம் ஆண்டு மே மாதம் 04ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முறைப்பாடு செய்த கடற்படை புலனாய்வு அதிகாரி விசாரணைக்கு முன்னிலையாக வில்லை. அந்த அதிகாரியை 2023 செப்டெம்பர் 21ஆம் திகதி (நேற்று முன்தினம்) நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு முல்லைத்தீவு நீதவான் டி. சரவணராஜா அன்றைய தினம் அழைப்பாணை விடுத்திருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் பெப்ரவரி 29, 2024 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# தானியங்கி பிஸ்டல் ஒன்றுடன் அங்கொட வெலி சுதா கைது!





முல்லேரியா பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில், அங்கொட வெலி சுதா எனப்படும் பிரியந்த சிறிநந்த என்ற பாதாளக்குழு உறுப்பினர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட அங்கொட வெலி சுதாவிடமிருந்து இத்தாலியில் தயாரிக்கப்பட்ட தானியங்கி கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய முல்லேரியா, அங்கொட பகுதியில் உள்ள அம்பத்தலயிலுள்ள வீடொன்றை சோதனையிட்ட போது அந்தத் துப்பாக்கியுடன் அங்கொட வெலி சுதா கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி இத்தாலியில் தயாரிக்கப்பட்ட புரூனி மொட் 92 மி.மி. (BRUNI MOD 92mm) வகையை சேர்ந்தது எனவும் அதன் மகசின் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 50 வயதுடைய நபரை துப்பாக்கியுடன் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸாரிடம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர்.



# 10 ஆயிரம் ரயில் தண்டவாளங்கள் சீன அரசாங்கத்தினால் அன்பளிப்பு

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு 10 ஆயிரம் ரயில் தண்டவாளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை பிரதான ரயில் மார்க்கத்தில் மஹவ முதல் கொழும்பு வரையிலான வளைவுகளுடன் கூடிய இடங்களில் பொருத்த திட்டமிட்டுள்ளது என ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ். குணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த பகுதிகளில் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படாவிட்டால், ரயில்கள் தடம்புரளும் சம்பவங்கள் பதிவாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதான மார்க்கத்தில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் கம்பஹாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மணித்தியாலத்திற்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் ரயில் போக்குவரத்தை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# இணையம் ஊடான மோசடிகள் அதிகரித்துள்ளன என எச்சரிக்கை

இணையம் ஊடாக இடம்பெறும் மோசடிகள் அதிகரித்து வருகின்றன என இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் மாத்திரம் இவ்வாறான 150 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று நிறுவனத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷருக்க தமுனுபொல தெரிவித்துள்ளார்.

தொழில் பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு சட்டவிரோதமான முறையில் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கடவுச்சீட்டுகளின் பிரதிகள் மோசடிக்காரர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதிகள், பரிசில்கள் தங்களிடம் உள்ளன எனவும், அதனை பெற்றுக்கொள்ளுமாறு குறுஞ்செய்திகளை அனுப்பி நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மிகவும் பாதுகாப்பாக செயற்படவேண்டும் என்றும் தனிப்பட்ட தரவுகளை வெளியிட வேண்டாம் எனவும் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம் என்று சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷருக்க தமுனுபொல தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பணவீக்கம் 2.1 வீதமாக குறைவு



தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில் கடந்த மாதத்தில் பணவீக்கம் 2.1 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 4.6 வீதமாகக் காணப்பட்டது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், ஜூலை மாதத்தில் -2.5 வீதமாகக் காணப்பட்ட இலங்கையின் உணவுப் பணவீக்கம் ஆகஸ்ட் மாதம் -5.4 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

இதேவேளை, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் வலுவான வேலைத்திட்டத்தின் காரணமாக பணவீக்கம் 62.1 வீதத்தினால் குறைவடைந்துள்ளது என பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்துள்ளார்.

40 ஆண்டுகளின் பின்னர் முதன்மைக் கணக்கு இருப்பு உயர்வடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

2022 ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் 66.7 வீதமாக இருந்த பணவீக்கத்தை, 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4.6 வீதம் வரை குறைக்க முடிந்தது எனவும் பதில் நிதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# உலக சுற்றுலா தினத்தையொட்டி கிழக்கில் பிரமாண்ட விளையாட்டு

- அபு அலா -

“உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் இணைந்து, சுற்றுலா வாரத்துக்கான நிகழ்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந் நிகழ்வுகள் திருகோணமலையில் நடத்தப்படும்” என கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபிஸ் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் முதலாம் திகதி வரை திருகோணமலை Dutchbay கடற்கரையில் இடம்பெறும் எனவும், இதில் பங்குபற்றுபவர்கள் கிழக்கு மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுகளின் ஓர் அங்கமாக பட்டம் விடுதல், மரதன் ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, பட்டம் விடுதல் போட்டியில் கலந்துகொள்பவர்கள் அழகிய, நேர்த்தியான, சிறந்த எண்ணக்கருக்களை வெளிப்படுத்தும் வகையில் பட்டம் விடுதல் வேண்டும் எனவும், அவ்வாறு தெரிவு செய்யப்படும் பட்டங்களுக்கு மிகப் பெறுமதியான பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அத்துடன், மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் போட்டி நடைபெறும் தினத்துக்கு முதல் நாள் ஈசிஜி (ECG) பரிசோதனை செய்யப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரை மரதன் ஓட்டப்போட்டி 21 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாகும். இதில் முதல் மூன்று இடங்களுக்கும் அடுத்த 10 இடங்களைப் பெறுபவர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதுபோன்றே ஏனைய போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0771175163, 0771208335 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 23.09.2023




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவிற்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். இன்று மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பது சிறந்தது. தெளிவான மனதின் மூலம் இன்று உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் சில கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். சூழ்நிலையை திறமையாக கையாள அல்லது தவறு நேராமல் இருக்க நீங்கள் அமைதியாக செயல்பட வேண்டும்.

உங்களின் விறைப்பான தன்மை காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். உறவின் நல்லிணக்கத்தைப் பேண இத்தகைய உணர்வை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு சிறிது வருத்தத்தை அளிக்கும்




இன்று சமநிலை உணர்வு காணப்படும். உங்கள் நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

நீங்கள் பணிகளை தரமாக முடித்து தருவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ளும் சுறுசுறுப்பு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேச வாய்ப்புள்ளது. இது இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இன்று சிறிது பணமும் சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிரார்த்தனை மற்றும் தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெறலாம். இதன் மூலம் தெளிவு கிடைக்கும். நம்பிக்கையான சிந்தனை உருவாகும்.

பணியில் உங்கள் நேர்மையான அணுகுமுறை சாதகமான பலன்களைத் தரும். பணியில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் பெறலாம்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இது இருவருக்குமிடையே நல்ல பிணைப்பை வளர்க்க உதவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்




இன்றைய செயல்களை பொறுமையுடனும் சமயோசித புத்தியுடனும் மேற்கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள்உங்கள் மனதில் குழப்பம் உண்டாக்கும். அத்தகைய உணர்விற்கு ஆளாவதை தவிருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்றைய பணிகளை முடிக்க திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் உறவில் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் ஒத்துப் போக உண்மையான முயற்சி எடுக்கவும்.

இன்று பணம் சம்பாதிக்க குறைந்த வாய்ப்பே உள்ளது. பணம் சேமிப்பதும் கடினம். நிதி சம்பந்தமான விஷயங்களில் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

சனி காரணமாக உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்தால் நற்பலன் கிடைக்கும்.

உங்கள் உறவில் மனக் குழப்பம் பாதிப்பை ஏற்படுத்தும். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக உங்களுக்கு கால் வலி அல்லது முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உறுதி மற்றும் நம்பிக்கை உணர்வு மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம்.

பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை திறமையாக துல்லியமாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கருத்துக்களை நட்பாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் உறவில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. அது உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய உதவும்.

இன்றைய நாளுக்கு தேவையான ஆற்றல் உங்களிடம் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக்கலாம். அதன் மூலம் ஆறுதல் மற்றும் திருப்தி கிடைக்கும். இன்று நற்பயன் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. விருப்பமில்லாத சூழ்நிலையை திறமையாகக் கையாள அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பழகும்போது சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

எதிர்பாராத காரணங்களுக்காக அதிக செலவுகள் ஏற்படும். பண விஷயங்களை கண்காணியுங்கள்.

தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -23.09.2023




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். அனுசரணையான போக்கின் மூலம் நன்மை கிட்டும். தடைகள் காணப்பட்டாலும் திட்டமிட்டு செயல்பட்டால் அதனை சமாளிக்க முடியும்.

கவனக்குறைவின் காரணமாக பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உறவில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அமைதியாக அமர்ந்து கலந்து பேச வேண்டும்.

அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் கையாள வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு செழிப்பான நாள். தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கு உதவும் தக்க முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக வளர்ச்சி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சில மாற்றங்களும் சில பயணங்களும் காணப்படும். தொண்டு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். சாதாரண செயல்களை ஆற்றுவதில் கூட தாமதங்கள் காணப்படும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அமைதியாக அதனை தீர்க்க வேண்டும்.

நிதிநிலைமையில் குறைந்த வளர்ச்சி காணப்படும். இன்று பணத்தை தக்க வைத்துக் கொள்வது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். திறமையாக திட்டமிட்டால் வெற்றி காணலாம். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை விரைவாக முடிக்க நேரலாம். உங்கள் பணிகளை எளிதாகக் கையாள உங்கள் நம்பிக்கை அணுகுமுறை உதவும்.

தம்பதியரிடையே பரஸ்பர மரியாதை நல்ல காணப்படும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்களின் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். ஸ்திரமான நிதிநிலைமைக்கான வாய்ப்பு உள்ளது.

நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





